## கொரடாச்சேரி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை: திருமதி. சா.உஷா,

ந.க.எண்.178/2023/அ1. நாள். 13.02.2024.

பொருள்: மனைப்பிரிவு–கொரடாச்சேரி முதல்நிலை பேரூராட்சி– மாங்குடி வருவாய் கிராமம் நி.அ. எண் 146/1,146/3, 147/1, 147/2A, 148/1, 148/2B1 மற்றும் 148/3Aல் 15.86 ஏக்கர் நிலப் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி – அனுமதித்து உத்தரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.9927/2022/TCP-12 நாள்.06.04.2023
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 239 / 2022 / TVR / நாள். 02.05.2023
3. திரு.ஆர்.சீனிவாசன், த/பெ.ராஜமாணிக்கம், பழவனக்குடி, கொரடாச்சேரி என்பவர்களது விண்ணப்பம் நாள் . 14.09.2023
4. இவ்வலுவலக பேரூராட்சி மன்ற தீர்மான எண்.209/27.09.2023.
5. இவ்வலுவலக கடித குறிப்பாணை ந.க.எண்.178/2023/அ1. நாள்.07.12.2023.
6. இவ்வலுவலக கடித குறிப்பாணை ந.க.எண்.178/2023/அ1. நாள்.06.02.2024.
7. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட் இணையதள வழி இரசீது எண். PGCINB605577906 நாள்.06.02.2024 .
8. சார்பதிவாளர்(பொ), சார்பதிவாளர் அலுவலகம், கூத்தாநல்லூர் அவர்களின் கடித ந.க.எண்.23/2024, நாள்.07.02.2024
9. தொடர்புடைய ஆவணங்கள்.

-----

உத்தரவு

பார்வை 1 இல் கண்டுள்ள சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி மாங்குடி வருவாய் கிராமம் நி.அ. எண் 146/1,146/3, 147/1, 147/2A, 148/1, 148/2B1 மற்றும் 148/3Aல் 15.86 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கி சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை தானமாக ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது..

பார்வை 3 இல் கண்டுள்ள மனைப்பிரிவுதாரர் திரு.ரா.சீனிவாசன், த/பெ.ராஜமாணிக்கம் என்பவர் மேற்படி இடத்தில் மனைப்பிரிவு அமைத்துள்ளதாகவும், சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை அளவீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இதனை தானப் பத்திரம் செய்து கொடுப்பதாக தெரிவித்துள்ளார்.

கொரடாச்சேரி பேரூராட்சிக்கு சாலை மற்றும் பொது உபயோகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை இனாசாசனம் செய்து ஒப்படைக்க அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, சாலைகள் மற்றும் திரவெளி மூலை முடுக்கு உட்பட்ட மொத்த விஸ்தீரணம் 18792.92 ச.மீ. பேரூராட்சி பொது உபயோக மொத்த விஸ்தீரணம் 237.13 ச.மீ. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்க வேண்டிய மொத்த விஸ்தீரணம் 238.90 ச.மீ, பூங்காவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் பூங்கா–I விஸ்தீரணம் 3015.06 ச.மீ. , பூங்கா–II விஸ்தீரணம் 1588.43 ச.மீ. ஆகிய இடங்களை செயல் அலுவலர், கொரடாச்சேரி பேரூராட்சி பெயரில் தானப் பத்திர பதிவு செய்து கொடுத்துள்ளார். (சார் பதிவாளர் அலுவலகம், கூத்தாநல்லூர் பத்திர பதிவு ஆவண எண். 2358/2022, நாள்.30.11.2022).

...2.

பார்வை 7 இல்கண்டுள்ளவாறு மனைப்பிரிவுதாரர் மேற்படி மனைப்பிரிவில் தெருமின் விளக்கு கம்பங்கள் மற்றும் மின்பாதைகள்அமைப்பதற்குரிய மதிப்பீட்டு கேட்பு தொகை ரூ.4,12,470/- தமிழ்நாடு மின் உற்பத்திமற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட்–க்கு இணையதள வழியாக நேரடியாக செலுத்தியுள்ளார். (இரசீது எண். PGCINB605577906 நாள்.06.02.2024).

பார்வை 1 இல் கண்டவாறு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இசைவு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.11/2024, நாள்.11.01.2024ன் படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு மேற்படி மனைப்பிரிவு இடத்தின் சந்தை மதிப்பு கோரப்பட்டது. பார்வை 8 இல் காணும் சார்பதிவாளர் அலுவலக கடிதத்தின் படி சந்தை மதிப்பு பெறப்பட்டுள்ளது.

பார்வை 1 இல் கண்டவாறு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இசைவு இறுதி ஒப்புதல் பார்வை 4ல் கண்டவாறு பேரூராட்சி மன்ற தீர்மான எண் 209, நாள்.27.09.2023ன் படி தீர்மானம் வழங்கப்பட்டுள்ளது

மேற்படி மனைப்பிரிவின் மனுத்தாரர் சந்தை மதிப்பில் 3 சதவீத தொகை ரூ.720000/–ஐ நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலக தலைப்பில் செலுத்தி ரசீது சமர்பித்துள்ளார். (செல்லான் எண். 20240213004944 / நாள்.13.02.2024). மேலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டண தொகை ரூ.2,82,000/–, காலிமனைவரி தொகை ரூ.5,20,818/–, அனுமதிக்கட்டணம் ரூ.5000/– கொரடாச்சேரி பேரூராட்சி இந்தியன் வங்கி கிளை வங்கி கணக்கு எண்.6557846853–ல் மின்னனு பரிவர்த்தனை மூலம் 09.02.2024–ன் படி தொகையை செலுத்தியுள்ளார்.

எனவே, மேற்படி மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டும், தணிக்கை தடைக்கு உட்பட்டும், மனைப்பிரிவுதாரர் திரு.சீனிவாசன், த/பெ.ராஜமாணிக்கம் என்பவர்களது பெயரில் மாங்குடி வருவாய் கிராமம் நி.அ. எண் 146/1,146/3, 147/1, 147/2A, 148/1, 148/2B1 மற்றும் 148/3A –ல் 15.86 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு அங்கீகாரம் செய்து இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு:
மனைப்பிரிவு வரைப்பட நகல்.

(முத்திரை: பேரூராட்சி அலுவலகம் கொரடாச்சேரி திருவாரூர் மாவட்டம்)

செயல் அலுவலர்,
கொரடாச்சேரி பேரூராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

பெறுநர்
1. திரு.சீனிவாசன், த/பெ.ராஜமாணிக்கம், பழவனக்குடி, கொரடாச்சேரி.

நகல்
1. நகர் ஊரமைப்புதுணைஇயக்குனர், திருவாரூர், அவர்களுக்குதகவலுக்காக அனுப்பப்படுகிறது.
2. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், நீடாமங்கலம் அவர்களுக்குதகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கூத்தாநல்லூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.